

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சுந்தரவேல்புரத்தில் JSW நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதி மூலம் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையத்தை நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் முன்னிலையில் திறந்து வைத்தார். உடன் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் ஆகியோர் உள்ளனர்.

# மதுரை வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, ஆக 18-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கி வருகிற 29.08.2024 அன்று மதுரை வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளதாக வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்,

அவரது அறிக்கை வருமாறு:-

சென்னையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரம்மாண்ட வெற்றி பெற்றதற்கு கழக தலைவருக்கு நன்றி தெரிவித்தல்,

கழகத்தின் பவள விழாவை வரவேற்கும் வகையில் கொண்டாடப்பட உள்ள முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை விளக்கும் வகையிலும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.வின் பொது உறுப்பினர்கள் குழு கூட்டம் கிழக்கு தொகுதிக்குட்பட்ட பொய்கைக் கரை பட்டியில் அமைந்துள்ள ஏ.கே.என்.கே பேலஸ் திருமண மஹாலில் வருகிற 29.08.2024 அன்று காலை 10.30 மணி அளவில் பிரமாண்ட மாக நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் – முரசொலிமாறன் 91வது பிறந்தநாள் விழா!

## சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி – டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, ஆக. 18-

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்கதத்துவ பேராசானுமான முரசொலிமாறன் அவர்களின் 91வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. அவரது திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். டாக்டர் எ.வ.வே.கம்பன் மற்றும் கழக முன்னோடிகள் மலர் தூவி மரியாதைசெலுத்தினர்.

17.08.2024 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திராவிட இயக்கதத்துவ பேராசான் முரசொலிமாறன் அவர்களின் 91வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

முரசொலிமாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.

கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்டதுணை செயலாளர் ப்ரியா விஜயரங்கன், மாநில தொமுச செயலாளர் க.சௌந்திரராசன், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் மற்றும் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பிறந்தநாள் விழாவில் திருவண்ணாமலை ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன், மாநகரமேயர் நிர்மலாவேல் மாறன் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், பாலமுரளி கிருஷ்ணா, டாக்டர் பிரவீன் ஸ்ரீதர், பி.கே.ஏ. அருண், கற்பகம் சரவணன், உ.நித்தியா, பேரூர் செயலாளர் சி.கே.அன்பு பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, மோட்டூர் பாலு, நகர நிர்வாகிகள் மு.கருணா மூர்த்தி, வட்டி அருணாசலம், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், கோல்டு எஸ்.பிரபு, அக்கீம் சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோ.இராஜசேகர், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, டி.எம்.கலை, எம்.ஆர். கலைமணி, இல. மின்னல் பாபு, கே.கந்தன், ஏ.எம். பாஷா, எஸ்.சமயராஜ், டி.பென்ராபர்ட், க.ரகுவர்மன், ஆர்.வெங்கடேஷ், சுனாபேகம், கஸ்தூரி, ஜெயமணி மூர்த்தி, பச்சையம்மாள்யேசு, காமாட்சி பாண்டியன் மற்றும் டி. எல்.எம்.வினோத்குமார், சென்னைசுரேஷ், வி.என். அருண்பாபு, பா.முர்பத், ஆ.கஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

# சைதை கிழக்கு பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஆக.18-

சைதை கிழக்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இது குறித்து பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சைதை கிழக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் இன்று (18.08.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு சாய் கிருஷ்ணா மஹால், கிழக்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டையில் நடைபெறுகிறது.

வருகிற சட்டமன்ற தேர்தலை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் சைதை கிழக்கு பகுதி தி.மு.க. நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (எல்.ஏ.ஏ.2) ஆலோசனைக் கூட்டம் இன்று18.08.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சைதாப்பேட்டை கிழக்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள சாய் கிருஷ்ணா மஹாலில் வைத்து பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயருமான மு.மகேஷ் குமார், மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகிகள் ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆலோசனை கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் மருத்தும் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே நமது சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மற்றும் பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) அனைவரும் குறித்த நேரத்தில் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் கிண்டி கத்திப்பாரா சந்திப்பு சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பம்மல் தெற்கு பகுதி வார்டுகள் முழுதும்

# இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை!

## வே.கருணாநிதி தலைமையில் அ. தமிழ்மாறன் துவக்கி வைக்கிறார் !

சென்னை ஆக:18

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் (இன்று 18.8.2024 ஞாயிறு காலை) 9.00 மணிக்கு 5வது வார்டு பாத்திமா நகர், 6வது வார்டு இரட்டை பிள்ளையார் கோயில் அருகில், 7 வது வார்டு தேவதாஸ் தெரு அண்ணா நகர், 8வது வார்டு பஜனை கோயில் தெரு,10 வது வார்டு ஐயப்ப நகர் பிள்ளையார் கோயில் தெரு 11 வது வார்டு காந்திநகர் பூங்கா அருகில், 12 வது வார்டு மூவேந்தர் தெரு நாகல்கேணி ஆகிய இடங்களில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்1 குழுத் தலைவர் வே. கருணாநிதி தலைமையில் பகுதி கழக நிர்வாகிகள்

ப.காளேஸ்வரன், ஆர். உமாசங்கர், என்.பன்னீர் செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, பா. டில்லி,பி.ஜே.வேந்தன், என். கே.ரவிச்சந்திரன், இரா.கந்தவேலு, ஆர்.கோகுல், சு. மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட கழகத்தால் நமது பகுதிக்கு பொறுப்பாளரக நியமிக்கப்பட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன் முகாமை துவக்கி வைக்கிறார்.

கூட்டத்தில் கழகப் பொருளாளர், கழக மக்களவை குழு தலைவர் டி.ஆர். பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ, மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், க.அன்புச் செல்வன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு, வட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணா வெங்கடேசன், வி.எஸ்.ஜெகநாதன் மு. இன்பசேகர், என்.காந்தி,எச். முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், மாவட்ட மாநகரபகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.



முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 91வது பிறந்தநாளை முன்னிட்டு புதுடெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா உள்ளார்.

## நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி – கீழ்கோத்தகிரி ஒன்றியப் பகுதிகளில்

# ஆ.இராசா எம்.பி. நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி, ஆக. 18-

கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா நீலகிரி மாவட்டம் - கோத்தகிரி - கீழ் கோத்தகிரி ஒன்றிய பகுதிகளில் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நன்றி தெரிவித்தல் நிகழ்ச்சி குறித்து மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு வருமாறு:-

20.8.2024 - செவ்வாய்க் கிழமை

- காலை 11.00 மணி : அரவேனு
- காலை 11.30 மணி : மிளிதேன்
- பகல் 12.00 மணி : நெடுகுளா
- பகல் 12.30 மணி : கெரடாமட்டம்
- மதியம் 1.00 மணி : எஸ்.கைகாட்டி
- மதியம் 3.00 மணி : கீழ்கோத்தகிரி பஜார்
- மதியம் 3.30 மணி : சோலூர்மட்டம்
- மாலை 5.00 மணி : கோத்தகிரி பேருந்து நிலையம்
- மாலை 5.30 மணி : கட்டபெட்டு

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், அனைத்து தரப்பு பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டுவதோடு, தொடர்புடைய ஒன்றிய-பேரூர் கழக செயலாளர்கள் நிகழ்ச்சி களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புடன் செய்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

## திருவள்ளூர் ஒன்றிய – வேப்பம்பட்டு ஊராட்சியில்

# கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், ஆக.18

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், 26 வேப்பம்பட்டு ஊராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறை சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகம் நடைபெற்றது. முகாமிற்கு ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் தலைமை தங்கினார்.

மாவட்ட சுகாதார அலுவலர் பிரியா ராஜ் வரவேற்புரையற்றினார் ஊராட்சி மன்ற தலைவர் சதா பாஸ்கரன் முன்னிலை வகித்தார்.

இந்த முகாமை பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தொடங்கி வைத்து முகாமை பார்வையிட்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கி வாழ்த்தி பேசினார்.

இதனை தொடந்து வேப்பம்பட்டு 26 ஊராட்சி மன்ற தலைவர் அலுவலகத்தில் சர்க்கரை ரத்த அழுத்தம் கால் வலி கால் குத்தல் மரத்து போதல் கால் எரிச்சல் காலில் நரம்பு சுருட்டல் மூட்டு வலி தைராய்டு தூக்கண்மை மூட்டு தேய்தல் ஆகிய பிரச்சினை காரணமாக கால் மற்றும் கையில் உள்ள நரம்புகள் தூண்டுவதில் ரத்த ஓட்டத்தில் அதிகரிக்கும் உடல் உறுப்புகள் சீரான நிலையில் இயங்க செய்கின்ற வகையில் மாபெரும் 15 நாள் இலவச கால் பாதத் தெரபி பயிற்சி மற்றும் கம்பேனியோவின் உடல் முழுக்கமான மருந்தில்லா ஆரோக்கிய விழிப்புணர்வு முகாமை பார்வையிட்டார்.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், திருமழிசை நகர செயலாளர் தி. வே.முனுசாமி, மாவட்ட கவுன்சிலர் இந்திரா குணசேகரன், வட்டார மருத்துவ அலுவலர் சுபாஷ் சந்திரபோஸ், மருத்துவ அலுவலர் சுபஸ்ரீ, கம்பெனியோ முகாம் ஒருங்கிணைப்பாளர் கணேஷ், கண்ணன், தங்கராஜ், கால் பாதத் தெரபி பயிற்சியாளர் பி.கே. ஷர்மிளா தேவி, மாவட்ட பிரதிநிதி ப.இம்மானுவேல், ஒன்றிய கவுன்சிலர் வ.ஹரி, வழக்கறிஞர் பாஸ்முருகன், வார்டு உறுப்பினர்கள் தேவராணி வேல்முருகன், வி.விநாயகம், எம்.பாஸ்கர், வி.சதீஷ், துளசிரவி, மருத்துவ துறை அதிகாரிகள் மோகன், கணேசன், ஸ்ரீதேவி, ராஜேஷ், மதியழகன், பூ.வேலன், செல்வம், குணசீலன், குகமணி, ஹரி, திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகாமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி 1,2, 13, ஆகிய வார்டுகளில் 12.45 லட்ச மதிப்பீட்டில் புதிய மின்மாற்றிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் திருவேற்காடு நகரமன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, நகராட்சி ஆணையர் தட்சிண மூர்த்தி, சுரேந்தர், மின்வாரிய பொறியாளர் கலைவேந்தன், ஜெயபிரகாஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, ஏ. ஜெ.பவுல், கவுன்சிலர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் ஜெ.சரவணன், எஸ்.சங்கர், காஜா, ஆசீர்வாதம், குமார், பி.வி.கே.கண்ணன், சாந்திராஜா, இளையராஜா, துரை கோபால், பரிசமுத்து, சத்தியாகிரி, பொன்.மனோகர், என்.ராஜ், காந்தி, இளங்கோ, வழக்கறிஞர்கள் சதீஷ், பாலாஜி, எம். சுரேஷ், நாராயணன், நரேஷ், உள்பட பலர் உள்ளனர்



திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிக் குழு அலுவலகத்தில் மாவட்ட கவுன்சிலர் கூட்டம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவரும் திட்டக்குழு தலைவருமான கே.வி.ஜி.உமாமகேஸ்வரி வேணு தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட ஊராட்சி குழு அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அமைத்திட மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உடன் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி. தேசிங்கு , ஊராட்சி செயலர் முருகன் மாவட்ட கவுன்சிலர்கள் இந்திராகுணசேகரன், ஏ.ஜி.ரவி, சாரதம்மாள்முத்துசாமி, விஜயகுமாரி சரவணன், டி.தென்னவன், சரஸ்வதிசந்திரசேகர், சிவசங்கரிஉதயகுமார், மோரை மு.சதீஷ் குமார், கோ.சுதாகர், ஆர்.டி.இ.உதயசூரியன், தேசராணி தேசப்பன், சித்ரா முனுசாமி, தேவி தயாளன், உள்பட பலர் உள்ளனர்.